பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 20 | 05-09-94 | திங்கட்கிழமை | ஓசை 199

## வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவசரகாலசட்டம் நீக்கம்

அவசரகாலச்சட்டம் நேற்று நள்ளிரவு முதல் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நீக்கப்பட்டது. இதற்கான பிரகடனத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார். இதற்கான அங்கீகாரம் நாளை பாராளுமன்றம் கூடும் போது வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 17 வருடகால ஆட்சியின் போது தொடர்ச்சியாக அவசரகாலச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்ததும், இவ் அவசரகாலச்சட்டம் அரசின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவின் சமாதானப் பேச்சிற்கான யாழ். விஜயம் உயர்மட்டத்தில் ஆராய்வு!

## அஷ்ரப் - தொண்டமான் கூட வரலாம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சு நடத்துவதற்காக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா உத்தேசித்துள்ள யாழ்ப்பாண விஜயத்திற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு உயர்மட்டத்தில் ஆராயப்பட்டுவருவதாகவும், பிரதம மந்திரியின் இவ்யாழ் விஜயத்தின்போது, அமைச்சர் அஷ்ரப்பும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானும் உடன்வரத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்துச் செய்தி வெளியிட்டுள்ள கொழும்புப் பத்திரிகைஒன்று, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த சந்திரிகாகுமாரணதுங்கா திட்டமிடுவதைத் தொடர்ந்து அவரின் இவ் விஜயத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உயர்மட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் அப் பத்திரிகை பிரதமர் யாழ்ப்பாணம் செல்லும் பட்சத்தில் அவருடன் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான அஷ்ரப்பும், இலங்கைத்தொழி

(4ஆம் பக்கம் பார்க்க)



## யுத்த நிறுத்த விடயத்தில் பிரதமர் பக்கமே நாம் நிற்போம்

### பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஹமில்டன்

(கொழும்பு)

யுத்தநிறுத்தம் செய்வதற்கான சாத்தியக்கூறுபற்றி தற் எடுக்கப்பட்டால் பாதுகாப்பு அதிகாரிகள் பிரதமர் சந்திரிகா பக்கமே நிற்பர் என ளார்.

பிரதமர் சந்திரிகா தனது வடபகுதி விஜயம் குறித்து

## புலிகளுடன் சமாதானபேச்சு; ராணுவத்தில் முரண்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுகளை புதிய அரசுநடத்த திட்டமிட்டிருப்பதை இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் எதிர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது புலிகளிடம் இருந்து ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீட்க வியர்வையை விட இரத்தத்தையே படையினர் அதிகம் சிந்தியதாக கனிஷ்ட இராணுவ அதிகாரியான புஷ்ப குமார என்பவர் கருத்து தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுகளின் போது புலிகள் தம்மை பலப்படுத்திக் கொள்வர் என்றும் படையினர் கருத்து தெரிவித்தனர்.

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்துக

### முன்னாள் விமானப்படை தளபதி

(கொழும்பு)

ஜனாதிபதிதேர்தலுக்குமுன்னர்பேச்சுவார்த்தைகளைஆரம்பிக்க முடியாது போனாலும் இருதரப்பினரிடையேயும் புரிந்துணர்வைஏற்படுத்த வேண்டும் இதற்கு யுத்த நிறுத்தமே சிறந்த வழி என முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலக்கா தெரிவித்தார்.

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி பூநகரி - சங்குப்பிட்டி பாதையை திறப்பதன் மூலம் யாழ் குடாநாட்டு மக்கள் ஏனைய பகுதிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வழிவகைகளைமேற்கொள்ளவேண்டும் இதுவே இருதரப்பினருக்குமிடையில் நம்பிக்கையை வளர்க்கும் எறிகணைத் தாக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

யுத்தநிறுத்தம் செய்வதற்கான சாத்தியக்கூறுபற்றி தற்போது ஆராயப்படவில்லை. வியாழன் நடைபெறவுள்ள கூட்டத்தில் இவ்விடயம் அதிகாரிகள் பிரதமர் சந்திரிகா பக்கமே நிற்பர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள் பிரதமர் சந்திரிகா தனது வடபகுதி விஜயம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆராய்ந்ததாகவும் தெரிய வருகிறது.



டும் இதற்கு யுத்த நிறுத்தமே யாழ் குடாநாட்டு மக்கள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினையில் எனதுதிட்டத்தை புதிய அரசு பின்பற்றுகின்றது

## தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கில் நான் சில யோசனைகளை முன்வைத்தேன் புதிய அரசு எனது யோசனைகளை பின்பற்றும் போக்கு தென்படுகிறது இந்த நிலையில் இவ்வாரசிற்கு நான் ஆதரவு வழங்குவேன் என இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தெரிவித்தார்.

விருந்துபசாரம் ஒன்றில் பேசிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில் எனக்கு அமைச்சரவையில் ஜே ஆர். இடம்தந்தார் அன்று நாடு அற்றவர்களாக இருந்த நாம் இன்று இந்நாட்டு பிரசைகளாகியுள்ளோம் எமது பிரச்சினைகள் இன்னமும் முழுமையாக தீரவில்லை நான் ஜே. ஆர். அரசிற்கு எதிராக வேலை நிறுத்தம் செய்த போதும் அவர் என்னை அமைச்சரவையில் வைத்திருந்தார் நாம் நல்ல கூட்டாக செயற்பட்டோம் என்றார்.

# தடைநீக்கப்பட்ட பொருள் கையில் எடுத்துவர அனுமதி

(கொழும்பு)

வடபகுதிக்கு தடைநீக்கப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல கடந்த சனியன்று தாண்டிக்குளம் படையினர் அனுமதியளித்தனர். கடந்த வெள்ளிவரை இப் பொருள்களை எடுத்துச் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது தனிப்பட்டவர்கள் கைகளில் கொண்டுவரும் பொருள்கள் அனுமதிக்கப்படுவதாகவும் லொறிகளில் எடுத்து வரப்படும் பொருள்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

எனினும் சில பொருள்களை எடுத்து செல்ல படையினர் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

# விடுவிக்கப்பட்ட கைதிகளை சந்திரிகா பார்வையிட்டார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் கடந்த வெள்ளியன்று விடுவிக்கப்பட்ட 10 சிறிலங்கா பொலிசாரை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க நேற்று சந்தித்தார்.

இனப்பிரச்சினையை தீர்க்க புதிய அரசு மனப்பூர்வ நோக்கு கொண்டிருப்பதால் நமது விடுதலை சாத்தியமானதாகவும் தமது குடும்பத்தினருடன் ஒன்றுசேர உதவிய பிரதமருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அப் பொலிசார் குறிப்பிட்டனர்.

முன்னைய அரசு தங்களை விடுவிப்பதற்கு மனப்பூர்வ முயற்சி ஏதும் மேற்கொள்ளாததையிட்டு தாம் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

உண்மைஉணர்வுடன் மனம் திறந்து பேச்சுகள் நடத்துவதன் மூலம் அரசு இனப்பிரச்சினையை தீர்க்க முற்படும் என பிரதமர் சந்திரிகா அங்கு குறிப்பிட்டார் யுத்தம் நீடிக்கும் ஒவ்வொரு நாளும் பல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஓய்வு

# அரசின் அறிவிப்பினால் 3000பொலிசார்பதவியிழப்பு

(கொழும்பு)

அரச சேவையில் பணியாற்றும் 60 வயதிற்குமேற்பட்ட அனைவரும் சேவையிலிருந்து விலகுமாறு அல்லது விரைவில் ஓய்வு பெறுமாறு புதிய அரசு விடுத்த அறிவிப்பினால் சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 3000க்கும் அதிகமானோர் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னைய அரசினால் ஓய்வு பெற்ற பல பொலிசார் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸ் திணைக்களத்தில் 70 உயர் அதிகாரிகள் 60 வயதைக் கடந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கென சுமார் 10 லட்சம் ரூபாவை பொலிஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஒற்றையாட்சி அமைப்பில் இருந்து சிறிதளவேனும் விலக மாட்டோம்

## ஆயுத படையினருக்கு அமைச்சர் ரத்வத்த உறுதி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொழுது நாட்டின் ஒற்றையாட்சி முறை ஒரு போதும் மாற்றப்படமாட்டாது என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சமூகத்திற்கும் அநீதி இழைக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது. விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைகள் மாத்திரமே ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வடபகுதிக்கு நேற்று முன்தினம் அமைச்சர் மேற்கொண்ட விஜயத்தின் போது இராணுவத்தினர் மத்தியில் உரை நிகழ்த்துகையில் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

அமைச்சர் ரத்வத்தவும் அவரது குழுவினரும் முதலில் பலாலி முகாமுக்கு விஜயம் செய்தார்கள். பொலிசாரினதும் ஆயுதப்படையினரதும் கொள்கைகளை அறிந்து கொள்வதும் முகாம்களைப் பார்வையிடுவதுமே அவர்களது விஜயத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தது.

அமைச்சர் ரத்வத்த விஜயம் செய்த முகாம்களில் இருந்த சகல பொலிசாரும் ஆயுதப்படையினரும் தத்தமது கருத்துக்களை சுதந்திரமாக

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வர்த்தமானி அறிவித்தல் இன்னும் வெளிவரவில்லை

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை புதிய அரசு தளர்த்தியுள்ள போதிலும் தடை நீக்கம் குறித்த வர்த்தமானி பிரகடனம் இன்னமும் வெளியிடப்படவில்லை

தடை நீக்க அறிவிப்பை பிரதமர் சந்திரிகா அறிவித்த போதிலும் அதற்கான வர்த்தமானி பிரகடனத்தை ஜனாதிபதியே வெளியிட வேண்டும். இதை விரைவில் வெளியிடுமாறு புதிய அரசு கோரியுள்ளதாகதகவல் துறைஅமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

வர்த்தமானி பிரகடனம் வெளியிடப்படாதது குறித்து பிரதமருக்கு அறியத்தந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# தடை நீக்கம் குறித்து படை அதிகாரிகள் கவலை

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட்டால் இதனைப் பயன்படுத்திப் பணம் சம்பாதித்த இராணுவத்தினருக்கு பாதிப்பு ஏற்படும்- இதனால் அவர்கள் கவலை அடைந்துள்ளனர் என யாழ். மாவட்ட தலைமை குரு வண. பிதா இமானுவல் தெரிவித்துள்ளார்.

நேற்று லண்டன் பி பி ஸி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வேட்பாளருக்கு காமினியே பொருத்தம்

## ரணில் தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார். எதிர்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவே ஐ. தே. க. சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது-

ஜனாதிபதி தேர்தலில் நிற்க காமினியே சரியானவர் என முன்னாள் பிரதமர் ரணிலும் கருதுவதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவிக்கிறது.

# பேச்சுக்கான சூழலுக்கு யுத்த நிறுத்தம் அவசியம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி அதனைக் கண்காணிக்க ஒரு குழு ஒன்று ஏற்படுத்த வேண்டும். மேலும் இருதரப்பினரும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமே பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என இலங்கை சமாதான முயற்சிக்கான சர்வதேச நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் நடை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

Prof.T.சத்தியதாஸன் கணிப்பில், ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்து விட்டது. சிவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினாவிடைகள் (சி-10101)

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோர் வீதி முதலாம் ஒழுங்கையில் 2½ பரப்பு வீட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு விஷ்ணு முகவர் (பழைய நீதி மன்றுமுன்னால்) கண்டி வீதி, சாவகச்சேரி. (9270)

### புரோயிலர்குஞ்சுகள் விற்பனை

PRIMA பிறிமா ஒரு நாள் புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்குஒழுங்கை, மானிப்பாய் (9271)

### 'மாறாத மனங்கள்'

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாசகர் வட்டத்தினரால் 28. 08. 94 அன்று வெளியிடப்பட்ட திரு தி. உதயசூரியனின் ''மாறாத மனங்கள்'' என்ற சிறுகதைத் தொகுதியினை யாழ். மாவட்டத்திலுள்ள சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (9275)

### சேலைப்பை இனாம்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் நல்லூர் கண்காட்சி சாலையிலுள்ள அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருட்களை ரூபா 300/.க்கு கொள்வனவு செய்து ஒரு சேலைப் பையை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
[சி-10258]

---

ஜீவாகாரம்

விலை குறைப்பு

குழந்தைகளுக்கு 4 மாதத்திலிருந்து கொடுக்கக் கூடிய போஷாக்குணவு

## ஜீவாகாரம்

பக்கட் விலை 50/-

**அண்ணா தொழிலகம், இணுவில்.**

(சி-10260)

---

யாழ் மாவட்ட

## வெதுப்பக உரிமையாளர் சங்கம்

### வெதுப்பி - 5/- (பாண்)

### 07. 09. 94 புதன்கிழமை முதல்

மாவின் விலை அரசாங்கத்தினால் குறைக்கப்பட்டிருப்பதனால் வெதுப்பியின் (பாணின்) விலை 2/50 இனால் குறைக்கப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆகவே வெதுப்பியின் விலை 07-09-94 முதல் ரூபா 5/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு விற்பனைக் கழிவாக வெதுப்பி ஒன்றுக்கு 25 சதம் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலை, தரம், நிறை ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு அறியத்தரவும்.

ந. பாலவிநாயகர்
யாழ் மாவட்ட செயலாளர்

யாழ். மா. வெ. உ. சங்கர்,
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி-10268)

---

## தியாகி திலீபன்

## 7 ஆம் ஆண்டு நினைவு தின

கோட்ட, மாவட்ட ரீதியான

### கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுமகிழுங்கள்

போட்டி விதிமுறைகள்: 22-08-94 ஈழநாதம் பார்க்கவும்

போட்டி முடிவுத் திகதி 10-09-94

விடுதலைப் புலிகள்

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பெற்றவள் மடியில்
19. 02. 1974

வெற்றி மண் மீட்பில்
05. 09. 1991

### 2-ஆம் லெப்டினனட் இராவணன்

தங்கவேலு (கதிரவேலு) கிருபாகரன்
(5. 9. 91 அன்று மணலாற்றில் இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரச்சாவடைந்தார்)

இந்நிலம் தன்மொழி, தன்னினம்
தன்னிலம் தன்னாட்சி கண்டிட
மாற்றானின் இராணுவம் பதறிட
ஏற்றாயே இராவணா போர்ப்படை.
பரப்புக்கடந்தான், வளலாய், மணலாறு
விருப்பாகி விளையாடிய வெங்களங்கள்.
மணலாற்று மாவீரனே உன்வழி உயர்வழி.
அஞ்சலிக்கிறோம்.

5. 9. 94 திங்கட்கிழமை இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதியவிருந்தில் சகபோராளிகள் உற்றார் உறவினர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:-
ம. ம. வி. வீதி
நெல்லியடி, கரவெட்டி.

ஐயா. அம்பலம்
தங்கவேலு குடும்பத்தினர்
உடுப்பிட்டி.

(9284)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை பாறூக்

( தனபாலன் சிறிதரன் )
[சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்]

தாய் மடியில்
02 - 01 - 1973

தமிழீழ மண்ணில்
05 - 09 - 1991

---

## நினைவு கூருகின்றோம்...

### 05. 09. 1994..

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அஜந்தன்** (சின்னத்தம்பி குணசிங்கம் - காரைதீவு - அம்பாறை)

1987ஆம் ஆண்டு வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**இரத்தினம்** ( — சிவகுமார் - வவுனியா)

1989ஆம் ஆண்டு திருமலை - பன்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். பாஸ்கர்** (வேலன் பாக்கியம் விஜயகுமார் - காரைதீவு - அம்பாறை)

மாங்குளம் - வன்னிவிளாங்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த

**சண்** (சின்னத்தம்பி புண்ணியமூர்த்தி - வன்னிவிளாங்குளம் - மாங்குளம்)

1990ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். காமன்** (கதிர்காமத்தம்பி ஜெகதீஸ்வரன் - ஏ. ஜி. ஏ. வீதி, செங்கலடி - மட்டு)

இதே நடவடிக்கையின்போது தனது கைக்குண்டைத் தானே வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். முத்து** (அழகப்போடி குமார் - மயிலம்பாவெளி - மட்டு)

கிளிநொச்சியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப் பிரிந்த -

**பழனி** ( — — கிண்ணியடி - திருமலை)

மாங்குளம் - வவுனிக்குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**சத்தியசீலன்** (துரைரத்தினம் சுரேஸ்குமார் - ஒட்டறுத்தகுளம் - வவுனிக்குளம்)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கேம்நாத்** (ஏகநாதன் விஜயபனந்தா - மருதடி, காரைநகர் - யாழ்)

**றிசான்** (செல்லையா சத்தியசீலன் - நாவலர் வீதி, மாதகல் - யாழ்)

யாழ் - மயிலிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**கமல்** (இராசரத்தினம் ஜீவராஜன் - கீரிமலை வீதி, சித்தன்கேணி - யாழ்)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பாபு** [கந்தசாமி ஆனந்தம் - கோரக்கல்லிமடு, கிரான் - மட்டு]

**சூரி** (தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் - கோயில்போரதீவு - மட்டு)

**மலையான்** (முத்துலிங்கம் செல்வகுமார் - பெரிய போரதீவு - மட்டு)

**கலீஸ்ரன்** (பரமக்குட்டி ஜெயக்குமார் - ஈச்சந்தீவு - மட்டு)

**ஜோசப்** (சுப்பிரமணியம் உதயகுமார் - கன்னன்குடா - மட்டு)

பெற்றுக் கொள்ளுங்கள்.
[சி-10258]

---

**அராலியூர்**

**ந. சுந்தரம்பிள்ளையின்**

அக்கரைச் சீமையில், ஆசிரியரது 45 வருட கால இலக்கிய அனுபவத்தில் பிறந்தது வாசித்தால் உண்மைக் கதை போலிருக்கும் இங்கிலாந்து போய் வந்த உணர்வு ஏற்படும். எங்கும் கிடைக்கும்
(9183)

---

**மகாதேவா**
**ஜோதிடம்**

வியாழமாற்றம் விற்பனையாகின்றது - 140 செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கருகில் சோதிடரைச் சந்திக்கலாம். (9231)

---

**வேப்பம், இலுப்பை விதைகள்**

சுத்தமான வேப்பம், இலுப்பை விதைகள் வாங்குகிறோம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் ஒப்படைக்கலாம். ''மில்க்வைற்''
(சி-10257)

---

**ஆறு.திருமுருகனுக்கு கௌரவிப்பு**
(குருநகர்)

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநர்கவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ காலத்தில் தொடர் சமய பேருரை நிகழ்த்தியமைக்காக திரு ஆறு-திருமுருகன் 'செஞ்சொற்சஞ்சீவி' என்னும் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 31-ஆம் திகதி திருக்கல்யாண திருவிழாவின் போது தேவஸ்தானத்தால் மேற்படி பட்டமளித்துக் கௌரவித்தல் நடைபெற்றது. (21)

---

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு (மகளிர்)

(சி-10169)

---

## ஓகஸ்ட் மாத அதிர்ஷ்டசாலிகள்

1-ம் பரிசு: இல 7506 சி. சின்னத்துரை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

2-ம் பரிசு: இல. 7274 ச. சசிகலா 116, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

3 ம் பரிசு: இல. 7412 எஸ். சபாரட்ணம், 43/1A. மொறிஸ் வீதி, சுண்டிக்குளி.

★ மின் உபகரணங்கள்

★ ஆலய உபகரணங்கள்

★ வேறும் தேர்ந்த பொருட்கள் மலிவு விலையில் விற்பனையாகின்றன.

## எழிலகம்

லெப். இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.
(சி-10267)

---

## விற்பனை முகவர்கள் தேவை

மாதாந்த இதழ்களை வெளியிடும் பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு நடமாடும் விற்பனை முகவர்கள் தேவை. யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள்; ஆண்கள் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்கள் நேரில்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 1994 09-10**

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

விளம்பர இல. 348
மே/பா ஈழநாதம் பணிமனை,
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10177)

---

02 - 01 - 1973 05 - 09 - 1991

அண்ணா!
வண்ணக் கனவுகள் வளரும் வயதிலே
மலர் நெஞ்சம் மண் மீது உலர்ந்ததுவோ
கண்மூடி நீண்ட துயில் கொள்கின்றாய்
கலங்காத நெஞ்சமும் கலங்குதே அண்ணா!
கூற்றவனின் கொடுமைக்கு முடிவே இல்லை
குழந்தை முகம் உங்களையுமா அழைத்துச் சென்றான்
ஏற்றுகின்ற தீபத்தின் ஒளியைப் போல - தமிழ்
ஈழத்திற்காய் வாழ்ந்தாயே அண்ணா எங்கே சென்றாய்
உன்னுடன் களமாடிய வீரமறவர்களை நினைக்கிறேன்.

உன்நினைவில்
அன்புத் தங்கை
த. சிவகௌரி


நீர்வேலி.
(9278)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
29 - 09 - 1934

உதிர்வு:
06 - 08 - 1994



அமரர்
**இப்பொலிற் செபஸ்ரியாம்பிள்ளை**

பாஷையூர் ஈன்ற பெருமகனே
பாசமாய்க் காத்த திருமகனே
நேசமாய் நாம் இருந்தோம்
நேசரிடம் நீர் சென்றீரோ

மனைவி உடன் பிள்ளைகளும்
மனதுருகி வாடி நிற்க
பிரியாது உம் நினைவு
கண்ணீரால் எம் அஞ்சலிகள்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 35/2, 3-ம் குறுக்கு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(சி-10265)

---

**ஜோசப்** (சுப்பிரமணியம் உதயகுமார் - கன்னன்குடா -மட்டு)

**பிரசாத்** (வடிவேல் ரவி - 3-ம் குறிச்சி, ஆரையம்பதி- மட்டு)

**மேஜர் ஜானி** (குலசேகரம்பிள்ளை கலைவாணன் - சீனன்குடா - திருமலை)

**பாபு** (தங்கவடிவேல் சசிக்குமார் - மூதூர் - திருமலை)

**சுபாதிகா** (யேசுமரி வேலுச்சாமி - குச்சவெளி - திருமலை)

**லெப். சீமா** (இராசலட்சுமி சுந்தரலிங்கம் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

**சந்திரன்** (ஆறுமுகம் சண்முகராஜா - 231. புன்னை நீராவி - முல்லைத்தீவு)

**மனோகரி** (செல்வநிதி சேதுபதி - இராமநாதபுரம்- கிளிநொச்சி)

**லெப். அப்பி** [முத்தையா கணேஸ் - செம்மண்தீவு, முருங்கன் - மன்னார்]

**2-ம் லெப். இராவணன்-சுரேஸ்** (கதிரவேலு தங்கவேலு கிருபாகரன் - கரவெட்டி-யாழ்)

**2-ம் லெப். அருள்நங்கை** [பிரேமலதா மார்க் கண்டேசர் - ஊறணி - வல்வெட்டித்துறை]

**2-ம் லெப். டார்லி** [மரியகெற்றி யோசப் - அல்வாய் தெற்கு - பருத்தித்துறை]

**பாரூக்** (தனபாலன் சிறீதரன் - நீர்வேலி - யாழ்)

**ரஞ்சிதகுமார்** (நல்லதம்பி பாலகுமார் - 3-ம் வட்டாரம் - புங்குடுதீவு)

**குரு** (சண்முகலிங்கம் முகுந்தன் - முல்லைப்புலவு - காரைநகர்)

**உமா** (பாலரஜனி பரமசிங்கம் - செம்பியன்பற்று வடக்கு)

1992ஆம் ஆண்டு மட்டு - வெல்லாவெளி நாவலடிச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**நிதி** ( — தியாகராசா - காரைதீவு - அம்பாறை)

**அருட்சந்திரன்-ஜோசப்** [வேல்முருகு மகேந்திரன் - களுதாவளை - மட்டு]

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10266)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை

# வடபகுதி விவசாய உற்பத்திகளுக்கு உரிய சந்தை வாய்ப்புக் கிட்டும்

## விவசாய அமைச்சர் ஜயரட்னா

(கொழும்பு)

மிளகாய், வெங்காயம் ஆகிய உப உணவுப் பொருட்களில் நாடு ஓரளவு தன்னிறைவு பெற முன்நின்று உழைத்தவர்கள் வட மாகாண விவசாயிகளே. அதற்கான பாராட்டை அவர்கள் பெறவேண்டும். வட மாகாண விவசாயிகள் மீண்டும் அந்த நிலையைப் பெறவேண்டும். அதற்கு விவசாய அமைச்சின் சகல ஊக்குவிப்புகளும் வட மாகாண விவசாயிகளை சென்றடையும்.

இவ்வாறு காணி, விவசாய வனவள அமைச்சர் டி. எம். ஜயரட்னா தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், வட பகுதி விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை கொழும்பில் சந்தைப் படுத்த உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும். தற்பொழுது அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொழும்பிற்கு கொண்டு வந்து சேர்ப்பது பெரும் பிரச்சினையாக இருக்கிறது எனினும், யாழ்ப்பாண விவசாயிகள் விவசாய அமைச்சர் முன்பணத்தை வீசக்கூடிய நிலை வெகு விரைவில் உருவாகும் எனவும் குறிப்பிட்டார்.

# யாழ்ப்பாணத்தில் படித்தவன் தமிழ் மக்களுடன் நல்லுறவுண்டு

## சபாநாயகர் கே. பி. ரத்நாயக்கா

(கொழும்பு)

நான் கல்வி கற்றது யாழ்ப்பாணத்தில் ஆகும். அதனால் தான் தமிழ் மக்களையும், தமிழ் மொழியையும் நன்கு அறிந்தவன். தமிழ்மக்களுடன் கொண்டுள்ள நட்புறவுகளை ஒரு போதும் கைவிடேன். இவ்வாறு சபாநாயகர் கே. பி. ரத்நாயக்கா கண்டி மல்வத்தை பௌத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் ரம்புக்வெல்ல சிறீ விபஸ்ஸி தேரோவுடன் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில். எதிர்க்கட்சியிலுள்ள தமிழ் உறுப்பினர்களும் எனக்கு ஆதரவு வழங்கியுள்ளனர் தமிழர்கள் தமது இனத்தைப் பற்றிப் பேசுவார்கள் முஸ்லிம்கள் தமது இனத்தைப் பற்றியும், உரிமைகளைப் பற்றியும் பேசுவார்கள் எனினும் சிங்களவர்கள் அவர்களைப் பற்றி பேசினால் அதை இனவாதம் என்கின்றனர். அவ்வாறு கூறுவதே இனவாதமாகும் எனத் தெரிவித்தார்.

அத்துடன்சிறுபான்மையினருக்கு ஏதேனும் வரப்பிரசாதங்கள் கிட்டுமாயின் அது எமது பெரும் சேவையாக கருதி அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒத்துழைப்புக்களை வழங்குவேன் நாட்டில் அமைதி இல்லாவிட்டால் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வது சிரமமானதாகும் எனவும் குறிப்பிட்டார்.

# தடைநீக்கம் குறித்து ரணில் மகிழ்ச்சி தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கு சில பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது குறித்து தான் மிகுந்தமகிழ்ச்சி அடைவதாகவும் அரசாங்கத்தின் அடுத்த கட்டம் தொடர்பாக மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

தடை நீக்கப்பட்ட பொருள்கள் ஏற்றிச்சென்ற லொறிகளும், அப் பொருட்களை கொண்டு சென்றவர்களும் வவுனியா முகாமில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்போது தான் பிரதமர் எடுக்கும் முயற்சி ஆக்க பூர்வமாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு பிரதமர் எடுக்கும் துணிவான முடிவுகளுக்கு நாம் ஒத்துழைப்பை நல்குவோம்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே காண முடியும் என முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நம்பினார். இதன் அடிப்படையில் பல பிரச்சினைகள் நீக்கப்பட்டுவிட்டன. ஆனால் முக்கிய விடயமாக வடக்கு - கிழக்கு இணைப்பு தான் இன்று உள்ளது. இதனை பிரதமர் சந்திரிகா எவ்வாறு வெற்றி கொள்வார் என்பதை பொறுத்துத்தான் பார்க்கவேண்டும் என மேலும் அவர் கூறினார்.

# புதிய கைத்தொழில் நாடாகுவது தூரத்து இலக்காகவே உள்ளது

## -பொருளியல் வல்லுநர்கள்

(கொழும்பு)

இரண்டாயிரமாம் ஆண்டளவில் புதிய கைத்தொழில் மய நாடு என்ற இலக்கை சிறிலங்கா அடையும் என்று முந்திய ஐ தே க அரசு கூறி வந்தது தூரத்து இலக்காகவே ...யில், பொதுவாக உலகில் ஒரு நாடு வளர்ச்சி நிலையை எட்டியதாக இருக்க வேண்டுமாயின் அங்கு மாதாந்த தனிநபர் வருமானம் சுமார் ஆயிரம் டாலர்களை எட்டியிருக்க வேண்டும். ஆனால் சிறிலங் ... 1993-ம் ஆண்டில் 526 அமெரிக்க டாலர்களாகவும் மட்டுமே இருந்துள்ளது.

இந்த நிலையில் புதிய கைத்தொழில் மய நாடு என்ற இலக்கை சிறிலங்கா 2000-ம் ஆண்டளவில் எட்டும் என்பது ...

# கம்உதாவ கண்காட்சி வேலைகள் நிறுத்தம்

(கொழும்பு)

திவுலப்பிட்டியவில் நடைபெறவிருந்த 1994 கம் உதாவ கண்காட்சிக்கான நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அமைப்பு வேலையிலீடுபட்ட சகல இயந்திரங்களையும் அப்புறப்படுத்துமாறு அமைச்சு ரீதியில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பாரிய நிர்மாண அமைப்புக்குஇதுவரை 6கோடியே 60 லட்சம் ரூபாசெலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாப்பரசரை வரவேற்க பிரமாண்டமான ஏற்பாடு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தரவிருக்கும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கும் ஏற்பாடுகளில் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையிலான குழு ஈடுபட்டு வருகிறது.

பாப்பரசரின் இந்த விஜயத்தை வெற்றிகரமாக இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதில் பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கும் ஆர்வத்தை அமைச்சர் கூட்டத்தின் போது விரிவாக விளக்கினார். சகல மதங்களுடனும் நல்லுறவை ஏற்படுத்தி பாதுகாப்பதில் இன்றைய அரசாங்கம் கொண்டுள்ள ஆர்வத்தையும் அமைச்சர் கதிர்காமர் எடுத்துரைத்தார்.

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பாக

# நீதிமன்றம் செல்வதில் ரணிலுக்கு ஆர்வமில்லை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து நீதிமன்றம் செல்வதில் ஆர்வமின்றி இருப்பதாக முன்னாள் பிரதமரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஐ.தே க. பாராளுமன்றத்தில் இப்போதும் பலமான தனிப் பெரும் கட்சியாக இருப்பதாகவும், கட்சியின் ஒற்றுமை காக்கப்படவேண்டியது இப்போது அவசியம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன்எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் சாதிக்க வேண்டியவைகளும். ஆற்ற வேண்டியகடமைகளும் மிக அதிகமாகவே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் கழகம் நடாத்தும் யாழ்ப்பாணமாவட்டரீதியிலான மாபெரும் கரபந்தாட்டசுற்றுப்போட்டிகள்இன்று மாலை மூன்று மணிமுதல் நிலைய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன, செற் அப் முறையிலான இப் போட்டியில் 'ஏ' பிரிவில் ஒன்பது அணிகளும், 'பி' பிரிவில் 12 அணிகளும் பங்கு பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜோன் மேஜர் நிராகரிப்பு

(லண்டன்)

ஐ ஆர். ஏ யின் சமாதான அழைப்பை பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் நேற்று நிராகரித்தார். ஐ. ஆர். ஏ. யுத்தநிறுத்தம் குறித்த உறுதிப்பாடு இன்னமும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் பிரிட்டிஷ் பிரதமர் கூறினார்.

## ஒற்றையாட்சி

வெளியிட்டனர். சில படையினர் கருத்து வெளியிடுகையில் சமாதான பேச்சுவார்த்தைகளின் போது கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு பின்னர் நிறுத்தப்பட்டது எனக் கூறினார்கள்

இதற்கு அமைச்சர் ரத்வத்த பதிலளிக்கையில் இத்த ...

## ஜனாதிபதி

குதல்கள், விமானக் குண்டு வீச்சுகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென தெரிவித்தார்.

பற்றறிகள் சாதாரணமாக வடபகுதியில் கடைகளில் உள்ளன ஆனால் விலைதான் அதிகம் இது பொது மக்களையே பாதிக்கும் புலிகளின் நடவடிக்கையை எந்த விதத்திலும் பாதிக்காது என ...

## சிந்தனைக்கு..

உசித யுக்திகள் அந்த வேளைக்கு;
கொள்கைகள் எந்தக் காலத்திற்கும்.
- ஹென்றி வார்ட் பீச்சர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 05-09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

# அரசின் பக்கம்

இனப்பிரச்சினைத் தீர்விற்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியற் தீர்வு காணும் முயற்சிக்கு சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான அரசாங்கம் காட்டிய நல்லெண்ணச் சமிக்ஞைக்கு, தமிழ் மக்களின் சார்பில் தேசியத் தலைவர் பிரபாகரனும் தமது நல்லெண்ணத்தைக் காட்டியுள்ளார்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான அடுத்த கட்ட நடவடிக்கையை அரசாங்கமே தொடங்க வேண்டும். பிரான்ஸ் செய்தி நிறுவனத்தின் நிருபரான அமல்ஜெயசிங்கா இது பற்றிக் குறிப்பிடுகையில், ''விடுதலைப்புலிகள் இயக்கம் தமது காவலிலிருந்த பத்துப் பொலிசாரை விடுதலை செய்து சமாதானத்திற்கான தமது நல்லெண்ண சமிக்கையைக் காட்டியுள்ளது. இதன் மூலம் சமாதானத்திற்கான அடுத்த கட்ட நடவடிக்கை அரசாங்கத்திடம் விடப்பட்டுள்ளது'' எனத் தெரிவித்தார்.

இது தனியாக ஒரு நிருபரது கருத்தல்ல. பொதுவான அரசியல் விமர்சகர்கள் யாவருடைய அபிப்பிராயமும் இதுவே ஆகும். இந்நிலையில் அரசின் அடுத்த கட்ட நடவடிக்கையே இன்று அனைவராலும் எதிர் பார்க்கப்படும் ஒன்றாக உள்ளதெனலாம்.

இதேசமயம் அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நல்லெண்ண நடவடிக்கையானது ஓரளவு காத்திரமானதாக இருக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். ஏனெனில் தடை செய்யப்பட்ட 44பொருள்கள் மீதான தடையை எடுப்பது மாத்திரம் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினையைப் போக்கிவிடாது.

ஏனெனில் பொருளாதாரத் தடை என்பது தனிமைப் பொருள்கள் மீதான தடை எனப் பொருள் கொள்வதோ, விளக்கம் கற்பிப்பதோ தவறானதாகும். வடபகுதி மீதான பொருளாதாரத் தடையானது பல வேறு வழிகளில் கடைப்பிடிக்கப்படும் ஒன்றாகவே கடந்த காலத்தில் இருந்து வந்துள்ளது.

எடுத்துக் காட்டாக, கடல் வலயத் தடைச் சட்டத்தினால், மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த ஒருலட்சம் பேர் தொழில் வாய்ப்பை இழந்து அன்றாட வாழ்விற்கே அல்லலுறவேண்டிஏற்படுள்ளது. இந்நிலையில் பொருளாதாரக் கட்டுப்பாடு என்பது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களாக அவர்கள் உள்ளனர்.

இதே போன்றே மின்சாரம், எரிபொருள் என்பன ...

பல வேறு வழிகளில் கடைப்பிடிக்கப்படும் ஒன்றாகவே கடந்த காலத்தில் இருந்து வந்துள்ளது.

எடுத்துக் காட்டாக, கடல் வலயத் தடைச் சட்டத்தினால், மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த ஒருலட்சம் பேர் தொழில் வாய்ப்பை இழந்து அன்றாட வாழ்விற்கே அல்லுறவேண்டியேற்படுள்ளது. இந்நிலையில் பொருளாதாரக் கட்டுப்பாடு என்பது மிகவும் மோசமாகப் பாதிக்கப் பட்ட மக்களாக அவர்கள் உள்ளனர்.

இதே போன்றே மின்சாரம், எரிபொருள் என்பன வற்றின் மீது விதிக்கப்பட்ட தடையினால் தனியாகப் போக்குவரத்து மட்டும் பாதிக்கப்படவில்லை. வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கைத்தொழில், விவசாயம் உட்பட சகல பொருளாதார நடவடிக்கைகளுமே முடங்கிப் போயுள்ளன. இதனால் மக்கள் தமது அன்றாட சீவியத்திற்கே அல்லலுற வேண்டிய அவலமே ஏற்பட்டது.

இதைப்போன்றே பொருளாதாரத் தடையில் தச்சு வேலை, மேசன் வேலை மற்றும் நாளாந்தக் கூலி வேலை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பாதிப்பானது, இத்தொழில் வாய்ப்பிற்கு அடிப்படைத் தேவையான பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடையினால் மட்டுமல்ல, ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதினாலும் இத்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அத்தோடு முடக்கப்பட்டுள்ள போக்குவரத்தும் பொருளாதார அசைவியக்கத்திற்கு அவசியமானதாகும். போக்குவரத்துத்துறையில் பெரும் அளவில் மக்கள் தொழில் வாய்ப்புப் பெற்றிருப்பினும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளின் அசைவியக்கத்திற்கு போக்குவரத்து அவசியமானதாகும். போக்குவரத்து இன்றி உற்பத்தி பெருகினாலும்கூட பொருளாதாரம் முனைப்புப்பெற முடியாது.

இந்நிலையில் பொருள்கள் மீதான தடை நீக்கம் என்பது பொருளாதாரத் தடை நீக்கத்தின் ஒரு சிறு அலகே ஆகும். இன்று தனியாகப் பொருள்கள் மீதான தடைநீக்கம் என்பது தமிழ்மக்களின் இன்றைய நெருக்கடியான வாழ்க்கையைப் போக்கிவிடமாட்டாது. இந்நிலையில் பொருளாதாரத்தடை நீக்கமென்பது ஒட்டு மொத்தமாகத் தமிழ்மக்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பளிப்பதாகவே இருக்க வேண்டும்.

அல்லாது பொருள்கள் மீதான தடை நீக்கப்படுவதினால் மட்டும் தமிழ்மக்கள் சகஜ வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதாகக் கருதி விட முடியாது. அவ்வாறு இல்லாதுவிடின் தடை நீக்கப்பட்டு பொருள்கள் வடக்கில் வந்து குவிந்தாலும், அதைக் கொள்வனவு செய்ய மக்களிடம் பணம் இருக்கப் போவதில்லை.

ஆகையினால் இவ்விடயத்தில் அரசாங்கத்தின் முன்னுள்ள பணி பெரிது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதனைத் தீர்க்க அரசாங்கம் முயற்சி ஏதும் செய்யாது விட்டால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் அரசாங்கத்தின் முயற்சியில் தமிழ்மக்கள் நம்பிக்கை கொள்வது கடினமானதாகவே இருக்கும்.

-பொருளியல் வல்லுநர்கள்

(கொழும்பு)

இரண்டாயிரமாம் ஆண்டளவில் புதிய கைத்தொழில் மய நாடு என்ற இலக்கை சிறிலங்கா அடையும் என்று முந்திய ஐ தே க அரசு கூறி வந்தது தூரத்து இலக்காகவே இருக்கும் என்று பொருளியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், பொதுவாக உலகில் ஒரு நாடு வளர்ச்சி நிலையை எட்டியதாக இருக்க வேண்டுமாயின் அங்கு மாதாந்த தனிநபர் வருமானம் சுமார் ஆயிரம் டாலர்களை எட்டியிருக்க வேண்டும். ஆனால் சிறிலங்காவைப் பொறுத்த வரையில் இது 1992ம் ஆண்டில் 492 அமெரிக்க டாலர்களாகவும், 1993-ம் ஆண்டில் 526 அமெரிக்க டாலர்களாகவும் மட்டுமே இருந்துள்ளது.

இந்த நிலையில் புதிய கைத்தொழில் மய நாடு என்ற இலக்கை சிறிலங்கா 2000-ம் ஆண்டளவில் எட்டும் என்பது தூரத்து இலக்காகவே இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## புதிய அரசின் முயற்சிக்கு பௌத்த காங்கிரஸ் ஆதரவு

புதிய அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்தவாறு சாந்தியையும், முன்னேற்றத்தையும், ஒழுங்கையும் ஏற்படுத்த இலங்கை பௌத்த காங்கிரஸ் தனது முழு ஆதரவையும் வழங்கும் என்று அதன் தலைவர் டாக்டர் மாபலகம விபுல்சார தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தேர்தலின் மூலம் பிரதமராகப் பதவியேற்றிருப்பது குறித்து காங்கிரஸ் தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறது. மக்கள் நாட்டில் பயமின்றி நிம்மதியாக வாழ்வதற்கு ஏற்றதாக சந்திரிகாவின் ஆட்சி சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்

மக்களின் துயரங்களுக்கு தாம் தீர்வு காணப்போவதாக பிரதமர் சந்திரிகா உறுதிமொழி வழங்கியது குறித்து காங்கிரஸ் நம்பிக்கை கொண்டிருக்கிறது எனவும் தெரிவித்தார்.

## போலி இலக்கத்தகட்டுடன் அமைச்சின் வாகனம்

சுகாதார அமைச்சின் கராஜ்ஜில் போலி இலக்கத் தகட்டுடன் காணப்பட்ட பஜீரோ வாகனம் தொடர்பாக இரகசியப் பொலிசாரை விசாரணை நடத்தும்படி சுகாதார அமைச்சர் ஏ. எச்,எம் பௌசி பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் காலத்தில் இவ்வாகனத்தில் ஆயுதம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது

## தொழிலாளர் லயன்கள் மீது தொடர்ந்தும் கல்வீச்சு

இராகல முதலாவது டிவிஷனில் தொழிலாளர்களின் குடியிருப்புகள் இரவு நேரங்களில் பலத்த கல்வீச்சுக்கு இலக்காகின்றன. தொடர்ச்சியாக இடம்பெறும் இத்தாக்குதல்களையடுத்து தொழிலாளர்கள் விழிப்புடன் செயற்பட்டமையால் கல்வீசியவர்கள் எனக் கருதப்படும் சிங்களவர்களான இருவர் தொழிலாளர்களால் சுற்றி வளைத்து பிடிக்கப்பட்டுள்ளனர் கொலனி குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் இவ் இருவரும் பின்னர் விசாரணைக்காக ராகல பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். தேர்தலையடுத்து தொழிலாளர்களின் குடியிருப்புகள் கல்வீச்சுக்கு இலக்காகுவது அதிகரித்திருப்பது தெரிந்ததே.

## ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு

அராலிப் பகுதியில் இலவச ஆயுர்வேத வைத்திய சேவையை விஸ்தரிக்கும் முகமாகவும், வறிய மக்களின் வைத்தியப் பற்றாக்குறையை நீக்கும் முகமாகவும் அராலியில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி மக்கள் துயர்துடைப்புப் பணியினை வலிமேற்கு பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனா. இந்த இலவச வைத்தியசாலையினை வலிமேற்கு பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபரும், விசேட ஆணையாளருமான திரு. கா. சந்திரராசா சம்பிரதாயபூர்வமாக அண்மையில் திறந்து வைத்தார். இந்த வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அநேக நோயாளர்கள் பயனடைந்து வருகின்றனர். (41)

## ஆவணிப் பூரம்

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய ஆவணிப்பூர உற்சவம் இன்று மாலை 5.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி பக்திரச கீதங்கள் இடம்பெற்று தொடர்ந்து ''பாதம் தொழுவார் எழுவார்க்கும் அதிபரே'' என்னும் பொருள் பற்றி திரு தி. தட்சணாமூர்த்தி அவர்கள் சொற்பொழிவாற்றுவார் இதனையடுத்து அம்பிகை திருத்தொங்கலால் அலங்கரிக்கப்பட்ட சிங்க வாகனத்தில் திருவீதி வலம் வருவார்.

வெளியிட்டனர். சில படையினர் கருத்து வெளியிடுகையில் சமாதான பேச்சுவார்த்தைகளின் போது கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு பின்னர் நிறுத்தப்பட்டது எனக் கூறினார்கள்

இதற்கு அமைச்சர் ரத்வத்த பதிலளிக்கையில் இத்தகைய நிலைமை இனிமேல் இடம்பெறாது என உறுதியளித்தார்.

காரைநகர் கடற்படை முகாமுக்கு அமைச்சர் விஜயம் செய்தபோது சமாதான நடவடிக்கை சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று அங்கு கேட்கப்பட்டது.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில் இலங்கையில் ஒற்றையாட்சி முறை என்ற அமைப்புக்குள் நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் திட்டவட்டமாக முடிவு செய்துள்ளது என்று சொன்னார். இந்த நிலைப்பாட்டிலிருந்து சிறிதளவேனும் விலகுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினார்

முன்னைய நாட்களைப் போல விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை தப்பான வழியில் இட்டுச் சென்றால் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புப் படையின் மற்றொரு அங்கத்தவர் கேட்டதற்கு முக்கிய தவறுகள் மீளாய்வு செய்யப்படும் என்றும் இது மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கும் பிரதி அமைச்சர் சென்றிருந்தார். அங்கு பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் அங்கு தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் பாதுகாப்பு செயலாளரும் இயக்கச்சி, பூநகரி இராணுவ முகாமுக்கும் சென்றனர். அங்கு இம்முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டபோது தான் உயரதிகாரியாக இருந்ததை அவர் நினைவு கூர்ந்தார்.

த்த வேண்டுமென தெரிவித்தார்.

பற்றறிகள் சாதாரணமாக வடபகுதியில் கடைகளில் உள்ளன ஆனால் விலைதான் அதிகம் இது பொது மக்களையே பாதிக்கும் புலிகளின் நடவடிக்கையை எந்த விதத்திலும் பாதிக்காது என அவர் மேலும் கூறினார்.

### தடை நீக்கம்

யின் சிங்கள சேவைக்குஅவர் அளித்த பேட்டியிலேயே மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில் வடக்கு-கிழக்கு யுத்தம் நிறுத்தப்பட்டால் அது தமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அரச அதிகாரிகள் பலரும் கருதுவதாக குறிப்பிட்டார்.

### பேச்சுக்கான

பெறும்வரை பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ள முடியாது போய்விட்ட இவ்வேளையில் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை குழப்பாதிருப்பதற்கு இவ்வாறான வழியினைக் கையாளலாம் என தெரிவித்தார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 09. 05**

**திங்கள் இரவு**

08. 01 - தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08. 20 - செய்திச் சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம் - அண்ணாவியார் அரியாலையூர் நா. சின்னத்துரை அவர்களுடனான செவ்வி.

**1994. 09. 06**

**செவ்வாய் காலை**

07 02 - மாவீரவணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### பத்மநாதன் பிரதீபன்

(93-ம்ஆண்டு உயிரியல் மாணவன் யாழ். மத்திய கல்லூரி)

ஆடிக்கூடித்திரிந்த ஆருயிர் நண்பனே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு அரனடி சேர்ந்ததேனோ?
நண்பா உனக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கை யாக்குகின்றோம்
இவரின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

90, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். - நண்பர்கள் (9291)



நாடக ஆர்வலர்களே!

இதோ ஒரு வித்தியாசமான படைப்பு

''கீவீ, பீவீ, ற்றீவீ, ஜீவீ
சயிக்சிளோன், மயிக்கிறோன், தவிக்கிறோன் குவிக்கிளோன்
டிஸ்ற்றெம்பர், ஒக்ற்றோபர், எஸ்றோவர், றிஸ்ற்றோறர்
MAX, EAX, TAX, PAX
ஜக்கியறோக் கல்ச்சுறல் இக்கனோவகிறஃவி
டெக்கினோப் பயிறோ லெக்கறோத் தெறப்பி
டவுண்வோல், அப்புறோத், எவலூஷன், றிசோலூஷன்
இன்னும் எத்தினையோ இருக்குது மக்களே!
தடுபொடி, கடுவெடி, கொடுமுடி, எடுபிடி
அடிமரம், செடிமரம், நடுமரம், கொடிமரம்
முடிமரம், கொடுமரம், தடிமரம், ஓடிமரம்
இன்னும் எத்தனையோ இருக்கிறது, மக்களே!

நல்லூர் பொருண்மியக் கலையரங்கில்

இன்று (05-09 94) மாலை 6 மணிக்கு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தயாரித்து வழங்கும்

க. சிதம்பரநாதனின் நெறியாளுகையில்

"நாமிருக்கும் நாடு நமது"

-நாடகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
(சி-10269)


## எதிர்க்கட்சித் தலைவரை நம்பமுடியாது

# அவரது நெருங்கிய சகாக்கள் என்னைக் கொல்ல முயன்றனர்

### சந்திரிகா 'இந்து'விற்குப் பேட்டி

நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பாக நாம் அரசியல் முடிவு ஒன்றிற்கு வரவேண்டிய நிலை உள்ளது நாம் பதவிப்பிரமாணம் செய்ய சில மணித்தியாலங்களுக்கு முன்பு வரை தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் நாம் பதவிக்கு வராமல் தடுக்க எடுத்த முயற்சிகளை நாம் மறந்து விட முடியாது இதன் காரணமாக ஜனாதிபதி முறை ஒழிப்பில் எமக்கு அவர் தரும் ஆதரவில் பிரச்சினை உள்ளது என்னை பொறுத்த வரை அவர் நாட்டின் நலனில் எவ்வளவு நல்லெண்ணத்தில் செயற்படுகிறார் என்பதில் சந்தேகம் உள்ளது தேர்தல் முடிந்தவுடன் என்னைக் கொல்ல இவரின் நெருங்கியவர்கள் எடுத்த முயற்சியை நான் நன்கு அறிவேன் இதை விரைவில் அம்பலப்படுதுவோம் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். இப்பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலையில்இந்த அரசின் உறுதியைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்: நாம் பலமான நிலையில் உள்ளோம் என்றே கூறலாம் இதற்கு காரணம் எமது முன்னணியில் கூட்டு சேர்ந்த சககட்சியினர் நாட்டிற்கு நன்மை செய்ய விரும்புகின்றனர் முக்கிய பிரச்சினைகளை திர்க்க இவர்கள் விரும்புகின்றனர் எனவே ஜனநாயக சூழ்நிலையில் நாம் பிரச்சினைகளை உண்டுபண்ணாத வரையில் அவர்கள் தொடர்ந்தும் ஆதரவளிப்பார்கள்.

கேள்வி: விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு நடத்த வர இணக்கம் தெரிவித்திருப்பதுபற்றி மகிழ்ச்சியடைகிறீர்களா?

பதில்: இந்த விடயம் எவ்வளவு சரியானது என்பது தெரியவில்லை. இது தொடர்பாக பாதுகாப்பு பிரிவினருடன் பேச்சுகள் நடத்தி வருகிறேன். இது உண்மையாக இருந்தால் மகிழ்ச்சி தான்.

கேள்வி: எங்கே எப்படி சமாதானப் பேச்சு

விடயத்தில்நாம் எந்தநிபந்தனையையும் முன்வைக்கவில்லை.

கேள்வி: இம்முடிவுஎப்போது அமுலாகும்?

பதில்: ஏற்கனவே தீர்மானம் எடுத்தாகி விட்டது. நாம் இப்போது நடைமுறைகள் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம். இவ்விடயம்மிக சிக்கலானதாகும் தற்போது இப் பொருள்கள் மீது பல்வேறு குழுவினர் கமிஷன் பெற்ற பின்பே அது யாழ். மக்களை சென்றடைகிறது. இராணுவ மதிப்பீட்டின்படி சில ஆயுதக்குழுக்கள் மாதாந்தம் 30 லட்சம் ரூபாவிற்கு மேல் இதன் மூலம் வருமானம் பெறுகின்றனர் என்றும் இதில் ஒரு பகுதி குறித்த ஒரு சில அரச உத்திபோகத்தர்களுக்கும் போகின்றது என்றும் தெரியவருகிறது. நாம் பொருளாதாரத் தடையை நீக்கினாலும் லொறிகள் மீதான வரியை ஆயுதக்குழுக்கள் நீக்கமாட்டாது. ஆதலினால் அவற்றை நேரடியாக மக்களுக்கு கிடைக்கச் செய்யும் வழியை ஆராய்கின்றோம்.

கேள்வி: இது குறித்து ஜனாதிபதியும், இராணுவமும் இணக்கம் தெரிவித்துள்ளனரா?

பதில்: ஆம் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசியுள்ளேன்.

கேள்வி: நீங்கள் பதவி ஏற்றவுடன் சிக்கறுப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளீர்கள். அதன் மூலம் என்ன தெரியவந்தது?

பதில்: அமைச்சின் அலுமாரிகளினுள் நல்ல கதைகள் எல்லாம் உள்ளது. பாரிய மோசடிகள் நடந்துள்ளன, ஆயுதபேரம், எயர்பஸ் விவகாரம், தொலை தொடர்பு ஊழல் போன்றவற்றில் உயர்புள்ளிகள் பெருந்தொகை பணத்தை பெற்றுள்ளனர். அவர்கள் நன்மை செய்து கமிஷன் பெற்றால் மன்னிக்கலாம். அவர்கள் நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளனர்.

கேள்வி: தேர்தல் முறையை மாற்றுவீர்களா?

பதில்: நிச்சயமாக மாற்றுவோம்.

கேள்வி: இந்தியப் பிரதமரின் தூதுவர் விஜயமும் அவரின் செய்தியும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

பதில்: இது மிக முக்கியமானதாகவும் இது நல்லுறவின் ஆரம்பம். முன்னைய அரசு போலன்றி இந்தியா எமது அண்டைய மாபெரும் நாடு என்பதை உணர்ந்து பிரதேச ரீதியில் அணுகுவதை விரும்புகிறோம் நல்லுறவிலும் பார்க்க மிக நெருக்கமான உறவையே எதிர்பார்க்கிறோம். தற்போது இரு நாடுகளிலும் திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலாகியுள்ளது.

# சதிக்கும் எமக்கும் தொடர்பில்லை; விசாரிக்க டி.பி.யிடம் கோரிக்கை

### சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விடுத்தனர்

(கொழும்பு)

இராணுவ சதிப்புரட்சிக்கு தாம் திட்டமிட்டதாக வெளியான பொய்த் தகவல் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு சம்பந்தப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளனர்.

இந்தச் சதியுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறப்பட்ட பலாலி தளத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சரத் பொன்சேகா, கேணல் காமினி குணசேகர மற்றும் லெப். கேணல் அசோகா தொரதெனிய, லெப். கேணல் எம். ஆர் டபிள்யூ சொய்சா ஆகிய நால்வருமே இவ்வாறு தம் மீது வீழ்ந்த அவப்பெயரை நீக்க விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியைக் கோரியவர்களாவர்.

இதேபோன்ற ஒரு கோரிக்கையை முன்னர் லெப். ஜெனரல் லக்கி அல்கமவும் ஜனாதிபதிக்கு விடுத்தமை தெரிந்ததே.

இதேசமயம் இச்சதி குறித்து விசாரணைகளை பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த மேற்கொண்டுள்ளார்.

## சந்திரிகாவின்

லாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரான தொண்டமா

## குற்றம் நிருபிக்காததால் எதிரி விடுதலையானார்

(கொழும்பு)

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றின் அடிப்படையில் மட்டும் போதிய ஆதாரமின்றிக் குற்றம் சாட்டப்பட்ட கொக்குவில் வாசி ஒருவர் கொழும்பு நீதிமன்றத்தால் கடந்தவாரம் விடுதலை செய்யப்பட்டார்.

குண்டு தயாரிப்பில் ஈடுபட்டதன் மூலம் குற்றம் புரிந்ததாக கூறப்பட்ட கொக்குவி

யதை ஏற்றுக்கொண்ட நீதிபதி சந்தேகநபரை விடுதலை செய்தார்.

## கடற்றொழிலாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

(தொல்புரம்)

தொல்புரம் கிழக்கு, மத்தி, மேற்கு பகுதிகளைச் சேர்ந்த கடல் தொழிலாளர்களுக்

திரு. இ. சிறிரஞ்சன் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டமும், சங்கத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் நடை

## போட்டிமுடிவுகள் வெளியாகின

[நல்லூர்கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் இவ்வாண்டு நடத்தப்பட்ட சைவ சமயம் சார்ந்த ஐவகைப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசளிப்பு வைபவம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## கடற்படை நடமாட்டம்

(நல்லூர்)

யாழ் கடல்நீரேரிப் பகுதியில் இரவு நேரங்களில் கடற்படை ரோந்துப் படகுகள் நடமாடுவதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் கல்முனைக்கப்பால் பாலைதீவை அண்டிய கடற்பகுதியில் இரவில் நைலோன் வலைமூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கடற்படையினர் ரோந்து வள்ளங்களில் வருவதைக் கண்ட மீனவர்கள் தமது வலைகளை அறுத்துவிட்டுகரைசேர்ந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## கே. எஸ். ராஜா காலமானார்

(கொழும்பு)

பிரபல ஒலிபரப்பாளர் கே. எஸ். ராஜா நேற்று அதிகாலை காலமானார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளராகவும் திரைப்படக்கூட்டுத்தாபன பிரசார உத்தியோகத்தராகவும் இவர் கடமையாற்றினார்.

## அரசின்

திணைக்களம் வருடமொன்றிற்கு செலவிட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவர்களின் நியமனம் காரணமாக பலர் பதவி உயர்வு பெறும் வாய்ப்பை இழந்தனர்.


## உளங்கனிந்த நன்றி

எமது சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தொழிற் சங்கப் போராட்டம் வெற்றி பெறுவதற்குத் துணை நின்ற எமது அங்கத்தவர்கள், தேசநலன் விரும்பிகள், பெருமனதுடன் எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மதிப்புக்குரிய துணைவேந்தர், பல்கலைக் கழக நிர்வாகத்தின் ஏனைய உறுப்பினர்கள், எமது நடவடிக்கையினால் ஏற்பட்ட சங்கடங்களைச் சகித்துக்கொண்ட பல்கலைக்கழக ஆசிரிய சமூகத்தினர், அனைத்துப்பீட மாணவர்கள் ஆகிய அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நடவடிக்கையினால் ஏற்பட்ட சங்கடங்களைச் சகித்துக்கொண்ட பல்கலைக்கழக ஆசிரிய சமூகத்தினர், அனைத்துப்பீட மாணவர்கள் ஆகிய அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது தொழிற்சங்க நடவடிக்கையினால் பல்கலைக் கழகத்தின் இயல்பு நிலையில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மனம் வருந்துகின்றோம்.

நன்றி

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

(9285)

---

சுன்னாகம் வணிகர் கழகம்

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு 05-09-94 திங்கட்கிழமை சுன்னாகம் வணிகர் கழக எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் முழுமையாகப் பூட்டப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

வணிகர் கழகம்
சுன்னாகம்

[சி-10270]

---

யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30 மணிக்கு

**WAY OF THE DRAGON**

[கராட்டி]

—0—0—

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

**CIRCUS**

இதனுடன்

BIG BOSS படத்திலிருந்து புறூஸ் லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும்,

RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

—0—0—

பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்பு கொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.

(சி-10230)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

யாக இருந்தால் மகிழ்ச்சி தான்.

கேள்வி: எங்கே எப்படி சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கப்போகின்றீர்கள்?

பதில்: எம்மைப் பொறுத்தவரையில் இதை நாம் தொடங்கிவிட்டோம் என்றுதான்கூறமுடியும்பொருளாதாரத் தடையை நீக்கிய அந்தக் கட்டத்திலேயே பகிரங்கமான முதற் தீர்மானத்தை எடுத்தாகி விட்டது. ஏற்கனவே 42 பொருள்கள் தடை செய்யப்பட்டிருந்தன ஆயுதங்கள் உருவாக்க பயன்படுத்தப்படும் சில பொருள்களைத்தவிர மற்றையவை அனைத்தும் இப்போது அனுமதிக்கப்படுகிறது. இது எம் பக்க தீர்மானமாகும். இது

### சந்திரிகாவின்

லாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரான தொண்டமானும் உடன் செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேசமயம் வடக்கில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கும் முகமாக வடக்கில் விமானக் குண்டுவீச்சை தற்காலிகமாக நிறுத்தவும் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விடுவிக்கப்பட்ட

உயிர்கள் மடிகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார் பிரதமருடன் பொலிஸ் மா அதிபரும் உடன் சென்றிருந்தார்.

செய்யப்பட்டார்-

குண்டு தயாரிப்பில் ஈடுபட்டதன் மூலம் குற்றம் புரிந்ததாக கூறப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த வைத்தியலிங்கம் சத்தியரூபன் என்றவாலிபரே விடுதலை செய்யப்பட்டவராவார்-

குண்டு தயாரிப்பில் ஈடுபட்டதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், தடயப் பொருள் சமர்ப்பிக்கப்படவில்லை அரச பகுப்பாய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை, வெடி மருந்துகள் சட்டத்தின் 26 வது பிரிவுக்கு ஏற்ப அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டிவாதாடி

---

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆவணி மாதம் 22-ம் நாள் (7-9-94) புதன்கிழமை முற்பகல் 8.47 மணிக்கு மேல் 10.39 மணிக்குள் வரும் உத்தர நட்சத்திரமும் துலா லக்கினமும் கூடிய சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**கிருபாமூர்த்தி**<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>**புஸ்பவதனி**<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி துரைச்சாமி
''சந்திராலயா''
இந்துக்சல்லூரியடி, மானிப்பாய்.

திரு. திருமதி வடிவேலு
''சாந்தி இல்லம்''
காளிகோவிலடி, சங்கானை.

மணமகள் இல்லத்தில் (10-09-1994) 4.30 மணியளவில்
வரவேற்புபசார வைபவம் நடைபெறும்

வரவேற்பாளர்: வடிவேலு குடும்பம்
(இரு வீட்டார் அழைப்பு)

(9288)

---

(தொல்புரம்)

தொல்புரம் கிழக்கு, மத்தி, மேற்கு பகுதிகளைச் சேர்ந்த கடல் தொழிலாளர்களுக்கான கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைக்கும் பொருட்டு அண்மையில் தொல்புரம் கொட்டடியம்பதி ஆதிமுத்து மாரி அம்மன் ஆலயமுன்றலில் சமூகசேவையாளரும், கிராமசேவை அலுவலருமான திரு. இ. சிறிரஞ்சன் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டமும், சங்கத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வின் போது தொல்புரம் கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயருடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

---

## மரண அறிவித்தல்

### திருமதி
### கனகரத்தினம் கங்கேஸ்வரி

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் கங்கேஸ்வரி அவர்கள் 4-9-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற -கொல்லங்கலட்டி சைவத்தமிழ் கலவன் பாடசாலை- முதன்மை ஆசிரியரான கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், ராஜாஜி, சிவகுமாரி அவர்களின் அன்புத் தாயுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் யாழ் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் நேற்று நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
க. ராஜாஜி
(மகன்)

(9289)

---

## மரண அறிவித்தல்

### தம்பு வேலாயுதபிள்ளை

(பதிவாளர் தமிழீழ நீதிமன்றம் சாவகச்சேரி)

தம்பு வேலாயுதபிள்ளை 04-09-94 அன்று காலமானார். அன்னார் வே. தம்பு காலஞ்சென்ற தம்பு-தங்கம்மா ஆகியோரின் மகனும், பத்மதேவி (ஆனைக்கோட்டை) என்பவரின் அன்புக் கணவரும், செவ்வந்தி, செந்தீபன், செந்தூரூபன், செந்தீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிங்கராசா, ஆ. அன்னம்மா (பாலாவி), க. இலட்சுமிப்பிள்ளை (பளை), விசுவலிங்கம் (பிரான்ஸ்), ச. சின்னக்கிளி (கொடிகாமம்), ம. மங்கையர்க்கரசி (லிகிதர் பாராளுமன்றம் கொழும்பு), த. முருகமூர்த்தி ஆகியோரின் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் பற்றியவிபரம்பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறேன்.

தகவல்:
த. முருகமூர்த்தி
(சகோதரர்)

(9290)